# பெரியோர் ஓய்வுநாட் பள்ளிப் பாடங்கள்

இரண்டாம் காலாண்டு, 2018

## முடிவு காலத்துக்கான ஆயத்தம்


1. அனைத்துலகப் போராட்டம் (மார்ச் 31–ஏப்ரல் 6) ....6
2. தானியேலும் முடிவு காலமும் (ஏப்ரல் 7–13) .... 14
3. இயேசுவும் வெளிப்படுத்தல் புத்தகமும் (ஏப்ரல் 14–20) .... 22
4. இரட்சிப்பும் முடிவு காலமும் (ஏப்ரல் 21–27) .... 30
5. பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் இயேசு (ஏப்ரல் 28–மே 4) .... 38
6. பிரமாணத்தை ‘மாற்றுதல்’ (மே 5–11) .... 46
7. மத்தேயு 24உம் 25உம் (மே 12–18) .... 54
8. சிருஷ்டிகரைத் தொழுதுகொள்ளுங்கள் (மே 19–25) .... 62
9. கடைசிக்கால வஞ்சகங்கள் (மே 26–ஜூன் 1) .... 70
10. அமெரிக்காவும் பாபிலோனும் (ஜூன் 2–8) .... 78
11. தேவ முத்திரையா? மிருகத்தின் முத்திரையா? (ஜூன் 9–15) .... 86
12. பாபிலோனும் அர்மகெதோனும் (ஜூன் 16–22) .... 94
13. நம் ஆண்டவராகிய இயேசுவின் வருகை (ஜூன் 23–29) .... 102



பாட ஆசிரியர்

**முனைவர் நார்மன் ஆர். கல்லி, PhD,**

தமிழாக்கம்

மார்சல் ஐசக்



**தென்கிழக்கு இந்திய ஒன்றியம்**

**செவந்த்–டே அட்வென்ட்டிஸ்ட் திருச்சபை**

197, ஜீ. எஸ். டி. சாலை, வண்டலூர், சென்னை – 600 048



# கிறிஸ்துவும் முடிவுகாலமும்

இயேசு மனித மாம்சமுடையவராக இந்த உலகத்தில் இருந்தபோது, பின்வரும் வார்த்தைகளைச் சொல்லி தம் சீடர்களைத் தேற்றினார்: 'உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள்' என்றார். *யோவான் 14:1-4.*

இயேசு சொன்னதின் அர்த்தம் அவர்களுக்கு முழுவதும் புரியவில்லை; அந்த வாக்குத்தத்தம் நிறைவேறப் போகும் காலமும் அவர்களுக்குத் தெரியவில்லை; ஆனாலும் இயேசுவின் வார்த்தைகள் நிச்சயமாகவே அவர்களுக்கு ஆறுதலைக் கொடுத்திருக்கும். பிதாவின் வீட்டில் ஒரு வாசஸ்தலத்தைக் கொடுப்பதாக சொன்னாரே! இந்த உலகத்தில் கிடைக்கிற எதையும்விட நிச்சயமாக அது மேலானதாகவே இருக்கும்.

இப்படிச் சொல்வதற்கு சில நாட்களுக்கு முன்னர்தான் அவர் தம் சீடர்களோடு அமர்ந்து, தம்முடைய வருகைக்குமுன் என்னவெல்லாம் நடக்குமென சுருக்கமாகச் சொன்னார். 'வருங்காலம் பற்றிய வரலாறு' அது; ஆனால் கேட்பதற்கு அவ்வளவு சுவாரஸ்யமானது அல்ல. யுத்தங்களும், யுத்தங்களின் செய்திகளும், தேசங்களுக்கு விரோதமாக தேசங்கள் எழும்புவதும், பஞ்சங்களும், பூமியதிர்ச்சிகளும் 'வேதனைகளுக்கு ஆரம்பம்' என்று இயேசு சொன்னார். *மத் 24:8.* உபத்திரவங்களும், நம்பிக்கைத் துரோகங்களும், வஞ்சகங்களும், சோதனைகளும்கூட அப்போது காணப்பட இருந்தன.

வரலாற்றின் வசதியான காலக்கட்டத்தில் வாழ்கிற நாம், இயேசு முன்னுரைத்தது போலவே கிட்டத்தட்ட எல்லாமே நிறைவேறியிருப்பதைக் காணமுடிகிறது. காலத்தைப் பற்றிய இரண்டு முக்கிய தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியிருப்பதையும் நாம் காணமுடிகிறது. முதலாவது, 'ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும்' பற்றியது. *தானி 7:25.* மேலும் பார்க்க: *வெளி 12:6,14; 13:5; எண் 14:34.* இந்தத் தீர்க்கதரிசனம் கி.பி. 538இல் தொடங்கி, 1798இல் முடிவடைந்தது. இரண்டாவது, நீண்டதொரு காலக்கட்டம் பற்றிய

தீர்க்கதரிசனம். அது தானி 8:14 கூறும் 2300 இராப்பகல் பற்றிய தீர்க்கதரிசனம். 1844 இல் இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியது.

'நாட்களின் முடிவில்' நாம் வாழ்ந்துகொண்டிருப்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. தானி 12:13. இயேசுவின் இரண்டாம் வருகையோடு முடியும் இந்த உலகத்தின் முடிவு எப்போது இருக்கும் என்பது நமக்குத் தெரியாது; அது தெரியவேண்டிய அவசியமும் இல்லை. நிச்சயமாக முடிவு வரப்போகிறது; அந்த நாளுக்காக நாம் ஆயத்தப்பட்டிருக்க வேண்டும்; அது தெரிந்தால்மட்டும் போதுமானது.

எவ்வாறு நாம் ஆயத்தப்படுவது? 'நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொள்ளுங்கள்' என்று கொலோ 2:6 அருமையாகப் பதிலளிக்கிறது. அதாவது, முடிவு நாட்கள் பற்றிய பல உலக நிகழ்வுகளும், பல தலைப்பு செய்திகளும், பல கொள்கைகளும் நம் கவனத்தை எளிதில் திசை திருப்பி, கிறிஸ்துவின் வருகை எப்போது இருக்கும் என்று கணிப்பதிலேயே நம் நேரத்தைப் போக்கடித்துவிடும்; கிறிஸ்துவைப் பற்றி நம்மைச் சிந்திக்கவிடாது. ஆனால் நாம் ஆயத்தப்படுவதற்கு கிறிஸ்துதானே முக்கிய வழியாக இருக்கிறார்.

**எவ்வளவுக்கு இயேசுவின்மேல் கவனம் செலுத்துகிறோமோ, அவ்வளவுக்கு அவரைப்போல மாறுவோம். எவ்வளவுக்கு அவருக்குக் கீழ்ப்படிகிறோமோ அவ்வளவுக்கு நமக்காக வைக்கப்பட்டிருக்கும் சுதந்தரத்துக்காக ஆயத்தமாவோம்.**

இந்தக் காலாண்டில் நம் முக்கிய இலக்கே இயேசுதான்; ஆனால் முடிவு நாட்களையும், அவற்றிற்காக ஆயத்தப்படுவதையும் பின்புலமாக வைத்து அதை ஆராயப்போகிறோம். முடிவு நாட்கள் பற்றிப் பேசும்போது வரலாற்று காலங்களையும், உலக நிகழ்வுகளையும், வரலாற்றையும் வேதாகமம் வலியுறுத்துவதால் இவை எல்லாமே முக்கியமானவைதாம். ஆனாலும் இவற்றையும்கூட இயேசுவை மையமாக வைத்தே வேதாகமம் பேசுகிறது; அவர் யார்? அவர் நமக்காக என்ன செய்தார்? அவர் நமக்குள் என்ன செய்கிறார்? அவர் திரும்ப வரும்போது என்ன செய்வார்? இவற்றை வேதாகமம் விளக்குகிறது. கிறிஸ்துவும், சிலுவையில் அறையப்பட்ட அவர்மட்டுமே நம் விசுவாசத்தின் மையமாக இருக்கவேண்டும். பவுல் சொல்வதுபோல, 'இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்.' 1கொரி 2:2. எவ்வளவுக்கு இயேசுவின்மேல் கவனம்செலுத்துகிறோமோ, அவ்வளவுக்கு அவரைப்போல மாறுவோம்; எவ்வளவுக்கு அவருக்குக் கீழ்ப்படிகிறோமோ அவ்வளவுக்கு நமக்காக வைக்கப்பட்டிருக்கும் சுதந்தரத்துக்காக ஆயத்தப்படுவோம். இது இவ்வுலக வாழ்க்கைக்கும் பொருந்தும்; தம்மேல் அன்புகூருகிறவர்களுக்கு கிறிஸ்து ஆயத்தப்படுத்தியிருக்கும் 'இடத்திற்குள்' நாம் பிரவேசிக்கப்போகிற நாளுக்கும் பொருந்தும்.

*முனைவர் நார்மன் ஆர். கல்லி, PhD, அவர்கள் சதர்ன் அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகத்தில் முறைப்படுத்தப்பட்ட இறையியல் துறையில் ஆய்வுப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.*

# மனன வசனங்கள்

1 அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம்பண்ணப் போயிற்று. வெளி 12:17.

2 ராஜா தானியேலை நோக்கி: நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியினால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்கு தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவருமாய் இருக்கிறார் என்றான். தானியேல் 2:47.

3 நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். வெளி 3:21.

4 நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. 1யோவான் 4:10.

5 தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், ... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். பிலிப்பியர் 2:9-11.

6 உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். தானி 7:25.

7 கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். மத்தேயு 24:24.

8 வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக்கண்டேன்; அவன் பூமியில் வாசம்பண்ணுகிற சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்(தான்). வெளி 14:6.

9 உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச்சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். வெளி 12:9.

10 உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான். யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள். தானியேல் 12:1.

11 சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் மகத்துவமும் ஆச்சரியமுமானவைகள்; பரிசுத்தவான்களின் ராஜாவே, தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமானவைகள்.வெளி 15:3.

12 இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது.வெளி 17:5.

13 மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல, மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும். மத்தேயு 24:27.